1975 நவம்பர் 11]

Drinking water from Vaigai Dam to Madurai City

* 106 *Q.*—Thiru K. S. GANAPATHI (on behalf of Thiru D. SANTOSHAM): Will the Hon. the Minister for Health be pleased to state with reference to the answer given to Legislative Council Starred Question No. 97 on the floor of the Councli on 23rd December 1974—

(*a*) whether the investigation on the scheme to bring drinking water from Vaigai Dam to Madurai City has been completed; and

(*b*) if so, when the scheme will be implemented?

வைகை அணைக்கட்டிலிருந்து மதுரை மாநகரத்திற்குக் குடிநீர்

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): 23—12—1974-ல் சட்ட மன்ற மேலவையில் 97 ஆம் எண் வினவிற்கு அளித்த பதிலையொட்டி மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) வைகை அணைக்கட்டிலிருந்து மதுரை மாநகரத்திற்கு குடிநீரைக் கொண்டு வருவதற்கான திட்டத்தைப் பரிசிலனை செய்யும் பணி முடிவு பெற்றுள்ளதா?

(இ) ஆமெனில், அத்திட்டம் எப்போது நிறைவேற்றப்படும்?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ) ஆம். தமிழ் நாடு குடிநீர் வடிகால் வாரியம் இத்திட்டத்தை ஆய்வு செய்து முடித்து, பொது விவரச் செயற்குறிப்பு ஒன்றைத் தயாரித்து வருகிறது.

(இ) இந்தச் செயற்குறிப்பு தமிழ்நாடு குடிநீர்-வடிகால் வாரியத்தால் ஏற்பளிக்கப்பட்ட பிறகு அரசினல் பரிசீலிக்கப்படும்.

திரு. கே. எஸ். கணபதி: இந்தத் திட்டத்திற்கு எவ்வளவு செலவாகக் கூடும் என்று திட்டமிடப்பட்டிருக்கிறது என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: இந்த ஆய்வை நடத்தியபோது, வைகை அணைக்கட்டிலிருந்து மதுரை மாநகரத்திற்கு குடிநீரைக் கொண்டு வருவதற்கான திட்டத்தைப் பரிசிலனை செய்யும்போது, எப்படிப்பட்ட வழி முறையிலே திட்டத்தை நிறைவேற்றலாம் என்று மூன்று, நான்கு வகையாகப் பரிசீலித்திருக்கிருர்கள். ஒரு வகைப் பரிசிலனையில் 567 லட்சம் ரூபாய் திட்டத்

திற்குச் செலவாகும் என்றும், ஏறத்தாழ 14 லட்சம் ரூபாய் நிர்வாகச் செலவுக்கு ஆகும் என்றும் தெரிவிக்கப்படுகிறது. இன்னொரு வகையான திட்டத்தை நிறைவேற்ற 554 லட்சம் ரூபாய் மொத்தச் செலவு என்றும் 16½ லட்சத்திலிருந்து 17 லட்சம் ரூபாய் வரை நிர்வாகச் செலவு என்றும் கருதப் படுகிறது. இப்படி எந்த வகைத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டுமானாலும், 500 லட்ச ரூபாய்க்கு மேற்பட்ட முதலீடு செய்ய வேண்டியிருக்கிறது. அதற்கு மேல் அதை நடைமுறைப்படுத்த 16 லட்சத்திலிருந்து 17 லட்சம் வரை நிர்வாகச் செலவுக்கு என்று செலவிட வேண்டியிருக்கிறது. இன்னும் சிக்கனமான வழி வகை இருக்கிறதா என்று ஆராயப்பட்டது. பொதுப் பணித் துறையை கலந்தாலோசிக்கப்பட்டது. பொதுப் பணித் துறை யினுடைய குழாயோடு ஒரு குழாயை இணைத்து, அதன் மூலம் கால்வாயுடன் ஒரு குழாய் ஏற்படுத்துவதன் மூலம் செலவைக் குறைக்க முடியுமா என்பது பற்றி அந்தத் துறையுடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகின்றது. இன்னும் திட்டவட்டமான முடிவு எடுக்கப்படவில்லை.

Temporary Judicial Second Class Magistrates

* 107 *Q.*—THIRU K. S. GANAPATHI (on behalf of THIRU D. SANTOSHAM): Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Second State Conference of the Tamil Nadu State Magisterial Service Association has requested the Government to issue orders to regularise the services of all the existing temporary Judicial School Class Magistrates ; and

(*b*) if so, the action taken thereon?

நீதித்துறை இரண்டாவது வகுப்பு தற்காலிக மாஜிஸ்டிரேட்டுகள்

திரு. கே. எஸ். கணபதி (திரு. டி. சந்தோஷம் சார்பில்): மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) தற்போது பணியாற்றுகிற நீதித்துறை இரண்டாவது வகுப்பு தற்காலிக மாஜிஸ்டிரேட்டுகள் அனைவரின் பணியையும் முறைப்படுத்தி ஆணைகள் பிறப்பிக்குமாறு, தமிழ்நாடு மாநில மாஜிஸ்டிரேட்டுகள் சங்கத்தின் இரண்டாவது மாநிலக் கூட்டம் கேட்டுக் கொண்டுள்ளதா ?